## சுருக்கம்

மாற்றுத்திறனாளிகள் நலத் துறை – மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காதொலிக் கருவிகள் பெறப்பட்டு, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், புதிய உபகரணம் கோரி செவித்திறன் மாற்றுத்திறனாளிகள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும், காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகளின் எண்ணிக்கையில், 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கையில் பழுதடைந்த கருவிகளுக்குப் பதிலாக, புதிய காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வழங்குதல் – ஆணை – வெளியிடப்படுகிறது.

---

## மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை

அரசாணை (நிலை) எண்.09 நாள்: 01.08.2024,

குரோதி, ஆடி–16,

திருவள்ளுவர் ஆண்டு, 2055.

படிக்க :

1. அரசாணை (1டி) எண்.24, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந.2) துறை, நாள்.19.03.2018.
2. அரசாணை (ப) எண்.46, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந.2) துறை, நாள்.25.05.2018.
3. அரசாணை (நிலை) எண்.13, மாற்றுத்திறனாளிகள் நல (மாதிந–2)த் துறை, நாள் 04.05.2018.
4. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் அவர்களின் கடித. ந.க.எண்.2427/உ.உ.பிரிவு/2024, நாள்.25.06.2024.

******

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2017–2018–ஆம் நிதியாண்டில் கல்வி பயிலும் மாணவ/மாணவியர், பணிபுரிவோர் மற்றும் சுயதொழில்புரியும் செவித்திறன் குன்றிய மாற்றுத்திறனாளிகளுக்கு காதுக்கு பின்னால் பொருத்தும் 5,000 காதொலி கருவிகள் (BTE) வழங்குவதற்கு, தமிழ்நாடு ஒளிவுமறைவற்ற ஒப்பந்தப்புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000 தவறாது பின்பற்றப்பட வேண்டும் என்ற நிபந்தனையுடன், நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் செவித்திறன் பாதிக்கப்பட்ட 5000 மாற்றுத்திறனாளிகளுக்கு காதுக்கு பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வழங்குவதற்காக, ஒரு கருவியின் விலை ரூ.2460/– என்ற அடிப்படையில் ரூ.1,23,00,000/– நிதி வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 2018–2019 ஆம் நிதியாண்டு முதல் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம்

செயல்படுத்தப்படும் திட்டங்களுள் சுமார் 52 நலத்திட்டங்களை வரவு–செலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்குள் செயல்படுத்திட மாற்றுத்திறனாளிகள் நல ஆணையருக்கு அதிகாரப்பகிர்வு (Delegation of Power) வழங்கி ஆணையிடப்பட்டுள்ளது. அவ்வாணையின் பத்தி 2 (i) (7)–ல் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் வழங்கும் திட்டமும் இடம் பெற்றுள்ளது.

4. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2024–2025–ஆம் நிதியாண்டிற்கான மாற்றுத்திறனாளிகள் நலத் துறையின் மானியக் கோரிக்கையின் போது 21.06.2024 அன்று இன்னபிறவற்றுடன் கீழ்க்காணும் அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்கள்:–

> "மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காதொலிக்கருவிகள் பெற்று அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அந்த செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில், ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகளின் எண்ணிக்கையில், 25 சதவீதம் அளவிலான எண்ணிக்கை பழுதடைந்த காதொலிக்கருவிகளுக்குப் பதிலாக, புதிய காதொலிக்கருவிகள் வழங்கப்படும்".

5. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், தனது கடிதத்தில், ஒவ்வொரு ஆண்டும் செவித்திறன் மாணவர்கள், பணிபுரியும் மற்றும் சுயதொழில் புரியும் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு காதொலிக் கருவிகள் வழங்கப்பட்டு வருகிறது என்றும், தற்போது மேற்காணும் மாண்புமிகு முதலமைச்சரின் அறிவிப்பினை செயல்படுத்தும் வகையில், மூன்று ஆண்டுகளுக்கு முன்பு காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் பெறப்பட்டு, அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அவர்கள் விண்ணப்பிக்கும் பட்சத்தில் புதியதாக வழங்க ஏதுவாக, ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யும் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகளின் எண்ணிக்கையில், 25 சதவீதம் செவித்திறன் மாற்றுத்திறனாளிகளுக்கு வழங்க அனுமதித்து அரசாணை வழங்குமாறும், மேலும், இவ்வுபகரணங்கள் அரசின் நிதி ஒதுக்கீட்டிற்குள் கொள்முதல் செய்யப்படுவதால், கூடுதல் நிதி ஏதும் தேவையில்லை என்று தெரிவித்துள்ளார்.

6. மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநரின் செயற்குறிப்பினை நன்கு பரிசீலித்த அரசு, செவித்திறன் மாற்றுத்திறனாளிகள் மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் காதொலிக் கருவிகளின் பெற்று, தற்போது அவ்வுபகரணங்களில் பழுது ஏற்பட்டிருப்பின், அத்தகைய பயனாளிகள் புதிய காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் கோரி விண்ணப்பிக்கும் பட்சத்தில் ஒவ்வொரு வருடமும் மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படும் காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகளின் மொத்த எண்ணிக்கையில், 25 சதவீத அளவிலான ஒதுக்கீட்டுக்குள் பழுதடைந்த கருவிகளுக்குப் பதிலாக, புதிய காதுக்குப் பின்னால் அணியும் காதொலிக் கருவிகள் அரசின்

நிதி ஒதுக்கீட்டிற்குள்ளாக வழங்கிட மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநருக்கு அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிஜி தாமஸ் வைத்யன்**
**அரசு செயலாளர்**

பெறுநர்
மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர், சென்னை–5.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலகம்,
(மாற்றுத்திறனாளிகள் நல இயக்குநர் வழியாக)
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.

**நகல்:–**
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
நிதி (ச.ந/வ.செ.பொது–I&II/வ.வ–I)த் துறை, சென்னை–9.
செயலாளரின் தனிச் செயலாளர்,
மாற்றுத்திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //**

**பிரிவு அலுவலர்**
02.08.2024